போதசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இன நூலகம்.

Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 19 திங்கட்கிழமை (04-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 240

# ஓமந்தையில் இடம்பெற்ற மோதலில் இரு தரப்புக்கும் பெரும் உயிரிழப்பு!

## புலிகள் தரப்பில் மட்டும் 126 பேர் களப்பலி

வவுனியா, ஓகஸ்ட் 4

கடந்த வெள்ளி இரவு ஓமந்தைப் பகுதியில் புலிகள் நடத்திய 'செய் அல்லது செத்து மடி - 3' தாக்குதலின் போது இரு தரப்பினருக்கும் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டிருப்பதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன

தமது தரப்பில் 126 பேர் களப்பலியானதாகவும் படையினர் தரப்பில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாகவும் "புலிகளின் குரல்" வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

"ஜெய சிக்குறு" என அழைக்கப்படும் "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை வன்னிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மோதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை எந்நேரமும் ஆரம்பிக்கலாம்

திருகோணமலை ஓக. 4

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சேவையில் ஈடுபட "தராகி" "குட்வில்கைட்" ஆகிய இருகப்பல்களும் தயார் நிலையில் உள்ளதாக திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

'தராகி' கப்பலில் பணிபுரிய பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த 9 மாலுமிகளும்-

"குட்வில்கைட்" கப்பலில் பணிபுரிய பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த 5 மாலுமி

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல்நடத்தியபோதிலும் படையணிகள் இணைவது நிச்சயம்

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4

"ஓமந்தைப் பகுதியில் உள்ள 55 ஆவது படையணி மீது வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திய போதிலும் புளியங்குளத்தில் 55ஆவது படையணியும், 53 ஆவது படையணியும் இணைவது நிச்சயம்"

இப்படி சிரேஷ்ட இராணுவ அதிகாரியை ஆதாரம் காட்டி "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான இவ் வாரக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார்;

புளியங்குளத்தில் இரு அணிகளும் இணைந்ததும் வெற்றி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி பகுதியிலிருந்து ஷெல் வீச்சு

வவுனியா ஓக. 4

நெடுங்கேணியில் இருந்து நேற்று முழுநாளும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

சேத விவரங்கள் வெளியாகவில்லை. (இ3-164)

## பொலீஸ் காவல் நிலையம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்!

கொழும்பு, ஓக 4

மட்டக்களப்பு மாமாங்கம் பொலீஸ் காவல் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்திய போது பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார், 7 பேர் காயமடைந்தனர்.

மாமாங்கம் இந்து ஆலய வருடாந்த உற்சவம் நடைபெறுவதை முன்னிட்டு பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் போது 4 பொது மக்களும் காயமடைந்தனர்.

அதே நேரம் – ஆலயத்தில் 35 ஆயிரம் பொதுமக்கள் கூடியிருக்க ஆடி அமாவாசைத் தீர்த்தம் நேற்றுக் காலை நிறைவடைந்தது. (இ-3-5-21)

## சிம்பாப்வே அதிகாரி கொழும்பில் பேச்சு

### கப்பல் மர்மம் நீடிக்கிறது

சிம்பாப்வேயிலிருந்து இலங்கைக்கு மோட்டார் ஷெல்களை ஏற்றி வந்த சமயம் காணாமற்போனதாகக் கூறப்படும் கப்பல் தொடர்பாக சிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு அதிகாரிக்கும், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

சிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு அதிகாரி நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தவுடன் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

ஆயுத தளபாடங்கள் அனுப்பப்பட்ட ஆவணங்களையும் அவர் எடுத்து வந்துள்ளார்.

இந்த ஆயுத விநியோகத்தர் கப்பலில் ஆயுதங்களை ஏற்றாமலேயே பணத்தை சுருட்டிவிட்டாரா என்ற சந்தேகம் நிலவியபோதும், கப்பலில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டமையை மேற்கு நாடு ஒன்று உறுதி செய்துள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள தெரிவித்தன. (இ-3-150)

## மலேசியா செல்வார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் மலேசியா செல்ல உள்ளார். (இ-3)

## வவுனியாவுக்குத் தப்பி வந்த 350 பொலீஸார்!

கொழும்பு, ஓக. 4

கடந்த வெள்ளி இரவு ஓமந்தைப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து காணாமற்போன 350 பொலீஸார் வவுனியா பொலீஸ் நிலையத்துக்கு நேற்று வந்து சேர்ந்தனர்.

வவுனியா பொலீஸ் தலைமையகத்துக்கு வந்த அவர்கள் ஓமந்தையில் தாம் பணியாற்றமுடியாது என்றும் —

தம்மை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறும்— கோரினர்;

தாக்குதலுக்கு உள்ளான ஐந்து பாதுகாப்பு வலயங்களில் ஒன்றான நான்காவது பாதுகாப்பு வலயத்திலேயே இந்தப் பொலீஸார் பணியாற்றினர் என்றும் —

இவர்களை மீண்டும் ஓமந்தைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளி இரவு இடம்பெற்ற தாக்குதலில் 4 ஆவது பாதுகாப்பு வலயமே பெரும் சேதத்துக்குள்ளாகியது.

சேதத்துக்குள்ளான 2 ஆம், 3 ஆம், 5 ஆம், 6 ஆம்

(8 ஆம் பக்கம் பார்க்க)



பெனாஸிரின் அரசியல் "ஞானம்" அறிந்து தான் அனுராவும் அழைப்பு விடுத்திருப்பார் போலும்.....!

## இலங்கைக்கு ஆயுதப்பயிற்சி: அமெரிக்கா நிறுத்த வேண்டும்

### கூட்டணி எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 4

இலங்கையில் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடரும் அதேவேளை அமெரிக்காவின் "கிறீன் பரட்ஸ்" படையினர் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பது தமிழ் மக்களை அழிக்கும் செயலாகும். இலங்கைக்கு ஆயுதப்பயிற்சி, யுத்த ஆயுதங்கள் வழங்கல் ஆகியவற்றை அமெரிக்கா நிறுத்த ஐ. நா. நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஐ. நா. சபையின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் பிரான்ஸிஸ் வென்ரவிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் விஜயம் மேற்கொண்டுள்ள மட்டக்களப்பு ... தமிழர் விடுதலைக் கூட்டணி நாடா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவைப் பிடிக்க பெனாஸிர் யோசனை

கொழும்பு, ஓக. 4

இலங்கையில் நடக்கும் யுத்தத்தை எப்படி வெல்ல முடியும் என்பது குறித்து இலங்கை வந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவின் 20 ஆவது ஆண்டு அரசியல் வாழ்வுப் பூர்த்தி வைபவத்தில் கலந்துகொள்ள இலங்கை வந்த பெனாஸிர் பூட்டோவுக்குப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது வாசஸ்தலத்தில் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார்.

இந்த விருந்தில் அமைச்சர்களான பீரிஸ், தொண்டமான், அஷ்ரப், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவசுப்பிரமணியஜயர் வாலாம்பிகை அமமா

உடுவில் கற்பொக்கணையை சேர்ந்த திருமதி சிவ சுப்பிரமணிய ஐயர் வாலாம்பிகை அம்மா 2-8-97 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில் உரிமையாளரும், வலி - கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்க இணைப்பாறிய பொது முகாமையாளருமான நீ. சிவசுப்பிரமணிய ஐயரின் அன்பு மனைவியும், நாகபூஷணி, சந்தானகுமாரன் (சந்தானம்ஸ் போட்டோ, உடுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகாம்பிகை சந்தானகுமாரனின் அருமை மாமியும், சக்திதாயினி, சக்திபாலன், சக்திதர்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 3-8-97 ஞாயிற்றுக்கிழமை உடுவிலில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நீ. சிவசுப்பிரமணிய ஐயர்.
(கணவன்)

உடுவில். (சி/1255)

## வைரவப்பிள்ளை சிவக்கொழுந்து [மாப்பாணி]

[முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி]

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த வை. சிவக்கொழுந்து 02.08.1997 இல் காலமானார்.

இவர் ஜெகசோதியின் அன்புக் கணவரும், சரஸ்வதியின் (கனடா) அன்புச்சகோதரனும், இராசா, நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், அனுராதா, இரவீந்திரன் (சுவீஸ்), கீதா, சுரேந்திரன் (டென்மார்க்), குகனேந்திரன் (சுவிஸ்), சுஜாதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், கிருபாநிதி, நடராஜா (குவைத்), சுகன் (ஜேர்மனி), ஜெயந்திமாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீதன் (ஜேர்மனி), சாரங்கன், வாகீசன், மாதங்கன், காருண்யா, சர்மிலன், சரண்யா, கேகயன், விகர்ணன், துஷாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-08-1997 பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கிருபாநிதி
(மருமகன்)

ஸ்ரீ விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (48778)

## சோமசுந்தரம் சுரேந்திரன்

(மக்கள் வங்கி, வவுனியா)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி டாக்டர் சோமசுந்தரம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன் சோமசுந்தரம் சுரேந்திரன் 02-08-97 இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நிற்சிங்கம் (கிராமசபைத் தலைவர், வட்டுக்கோட்டை), திருமதி நிற்சிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) செந்தூரன் (பரி. யோவான் கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருகோணமலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி நி. சுரேந்திரன்
(மனைவி)

சித்தன்கேணி. (48790)

## சிவபாதம் மகேஸ்வரன்

(முன்னாள் பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, புத்தளம், பின் நைஜீரியா)

வளர்மதி, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவபாதம் மகேஸ்வரன் 1-08-97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் — நாகரத்தினத்தின் சிரேஷ்ட புதல்வனும், மகாதேவியின் அன்புக் கணவரும், அருள்மொழி (கண்ணகா), அபிராமி (அபி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சங்கர் சசிக்குமாரின் அன்பு மாமனாரும், விமலேஸ்வரன், கலாநிதி நகுலேஸ்வரன், திருமதி சாவித்திரிதேவி, நரேந்திரநாதன், லோகேஸ்வரன், மங்களேஸ்வரன், காலஞ்சென்ற சதானந்தன் (பாபு), ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 4-08-97 திங்கட்கிழமை 46/1, பொன்வெல் பிளேஸ், வெள்ளவத்தையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ந. பரமேஸ்வரன்

34 (54), அரசடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (48785)

## ஆலயத்தில் திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், ஓக. 4

இந்திய அமைதிப்படையின் தாக்குதலுக்கு உள்ளான உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் இப்போது திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஐந்து தளங்களைக் கொண்ட இராச கோபுரத்தில் புராண இதிகாச சரித்திர சம்பந்தமான நூற்றைம்பது விக்கிரகங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

திருத்த வேலைகளும், இராச கோபுர வேலையும் பூர்த்தியடைந்த பின்னர் அடுத்து வரும் உத்தராயண புண்ணிய காலத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய திருப்பணிச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தெரிவித்தார். (அ)

## ஆயுள்வேத வைத்தியருக்கு மீண்டும் அபின்

யாழ்ப்பாணம், ஓக. 4

ஆயுள்வேத வைத்தியர்களுக்கு மருத்துவத் தேவைகளுக்காக மீண்டும் அபின் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் அபின் வழங்கப்படும் என்று யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அரச அதிபரின் அனுமதிப் பத்திரம் மற்றும் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து அபினைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ)

## மரக்கறி விதைகள்

திருநெல்வேலி, ஓக. 4

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் உள்ளூர் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கத்தரி, தக்காளி, வெண்டி, பாகல், பயற்றை, புடோல், கீரை ஆகிய நல்ல இன விதைகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பெரும் போகத்திற்குத் தேவையான சோளம் விதையும் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகள் இவற்றை திணைக்கள விலைநிர்ணயத்தின்படி பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ135)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம் ஓக. 4

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜூலை மாதச் சம்பளக் கொடுப்பனவு இன்று திங்கட்கிழமை யாழ். பணிமனையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## இதய அஞ்சலி

யாழ். ராசி சில்க் உரிமையாளரின் அன்புத் தந்தை

**கனகசுந்தரம் பூலோகராசா**

அவர்களின் திடீர் மரணத்தைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தியாகராசா திருநாவுக்கரசு
குடும்பத்தினரும், ஊழியர்களும்,
முகவர் தபால் நிலையம்,
Gilani Agency - Post Office.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(48787)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபை ஊழியர்
து. தனபாலசிங்கத்தின் தந்தையார்

**அமரர் பொ. துரைசிங்கம்**

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
நல்லூர் பிரதேச சபை.

(48784)

## இரதோற்சவம்

யாழ். கலட்டி, எச்சாட்டி மஹாமாரியம்பாள் இரதோற்சவம் 5-8-97 செவ்வாய் காலை 9.00 மணிக்கும், தீர்த்தோற்சவம் 5-8-97 புதன் காலை 10 மணிக்கும் நடைபெறும் என்பதனை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

- பரிபாலனசபை
வண்- கிழக்கு, கலட்டி
எச்சாட்டி மஹாமாரியம்பாள் தேவஸ்தானம்.

(48788)


எமது புதிய வெளியீடு!

அப்பாஸ், அஞ்சு அரவிந்த் நடித்த
★ ஆசைத்தம்பி
ஒறிஜினல் வெளியீடுகள்!
ரகுமான், சுகன்யா நடித்த
★ ஹீரோ
ராம்கி, குஷ்பு நடித்த
★ இரட்டை ரோஜா
ஆபாவாணனின்
★ கறுப்பு ரோஜா

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.

(சி/1257)


உ
சிவமயம்

ஏழாலை வசந்தபுரம்
அருள்மிகு

## வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்



### ஏகாதசதின இலக்ஷார்ச்சனை விஞ்ஞாபனம் - (11 தினங்கள்)

கேட்டவர்க்குக் கேட்டவரம் கொடுத்தும், அருள் வாக்குக் கொடுத்தும் அருள்பாலித்து வரும் அம்பாளுக்கு 11 தினங்கள் தொடர்ந்து இலக்ஷார்ச்சனை நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆரம்ப தினம்: 06 08-1997 புதன் காலை 9.00 மணி**
**பூர்த்தி தினம்: 16-08-1997 சனி காலை 9.00 மணி**

★ பூர்த்தி தினத்தில் 1008 சங்காபிஷேகத்தினைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம்வருதலும், அன்னதான வைபவமும் இடம்பெறும்.


இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா. மகாதேவக்குருக்கள் ஆசியுடன்
புன்னாலைக்கட்டுவன் தி. கெங்காதரக்குருக்கள்
பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

தினமும் இசைஞான திலகம் வ. குமாரசாமி ஐயா அவர்களின் சொற்பொழிவும் இடம்பெறும்.

ஏழாலை. வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
(48782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஹத்தாமி இன்று பதவியேற்பு



தெஹ்ரான், ஓக. 4

ஈரானின் புதிய அதிபராக முஹமட் ஹத்தாமி (Mohammad khatami) இன்று உத்தியோக பூர்வமாகப் பதவியேற்றார்.

பதவியில் இருந்து விலகும் அதிபர் அக்பர் ரஸ்ஸன்ஜானியிடம் இருந்து அதிகாரங்களை அவர் இன்று பொறுப்பேற்றுக் கொள்வார்.

ஈரானிய அரசாங்கத்தில் 10 ஆண்டுகளாக இஸ்லாமிய கலாசாரத்துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்த ஹத்தாமி கடந்த மே மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பெரு வெற்றியீட்டினார்.

பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தப் போவதாகவும் கூடுதல் சுதந்திரத்திற்கு வாய்ப்பளிக்கப் போவதாகவும் கூறியுள்ள அதிபர் ஹத்தாமி ஈரானின் இளைய தலைமுறையினரிடையே பெரும் செல்வாக்குப் பெற்று விளங்குகிறார்.

அமெரிக்கா ஈரான் குறித்த தனது கடும் போக்கை மறுபரிசீலனை செய்ய அல்லது மாற்றிக் கொள்ள ஹத்தாமியின் பதவிக்காலம் ஒரு வாய்ப்பாக விளங்குவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இன்று பதவி விலகும் அதிபர் அக்பர் ரஸ்ஸன்ஜானி ஈரானிய ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்தும் முக்கிய பங்காற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயொத்தொலா அலிகொமேய்னியின் முக்கிய ஆலோசகராக அவர் விளங்குவார். (ஐ)

## நொம் பெனில் மக்கள் பேரணி!

நொம்பென், ஓகஸ்ட் 4

கம்போடியாவில் அமைதியை உருவாக்குமாறு கோரி ஆயிரத்துக்கு மேற்பட்ட சாதாரண மக்களும், பௌத்த துறவிகளும் தலைநகர் நொம்பெனில் பேரணி நடத்தியுள்ளனர்.

முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்தின் ஆட்சிகவிழ்க்கப்பட்டு நாடு இரண்டாவது பிரதமர் ஹூன் செனின் முழு அதிகாரத்தின் கீழ் வந்த பின்னர் முதன் முறையாக மக்கள் பேரணி அங்கு இடம் பெற்றிருக்கிறது. (ஐ)

## ரஷ்ய வர்த்தகர் சுவீடனில் சுட்டுக்கொலை

ஸ்ரொக்ஹோம், ஓக. 4

ரஷ்ய வர்த்தகர் ஒருவர் சுவீடனில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

நோபிள் நகரில் தனது மகனுடன் காரில் சென்று கொண்டிருந்த வேளை சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அவரை துப்பாக்கியால் சுட்டார். பின்னர் மருத்துவமனையில் அவர் உயிரிழந்தார். (ஐ)

### தாக்குதலை எதிர்பார்த்து

# இஸ்ரேலில் முழு உஷார்!

ரெல் அவிவ், ஓக. 4

பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதல்களை எதிர்பார்த்து இஸ்ரேல் முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த புதனன்று ஜெருஸலேமில் 'ஹமாஸ்' இயக்கம் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களைப் போன்ற மேலும் தாக்குதல்கள் இடம்பெறலாம் என அஞ்சப்படுவதால் பாதுகாப்பை முழு உஷார் நிலையில் வைத்திருக்குமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பணித்துள்ளார்.

இஸ்ரேலின் முக்கிய நகரங்களிலும் மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளின் நீண்ட எல்லையோரமும் பாதுகாப்புப் பிரிவினர் கூடுதலாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

இஸ்ரேலில் வன் செயல்கள் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பதற்றம் நிறைந்த பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இஸ்ரேலில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது.

### தஜிகிஸ்தானில் பரபரப்பு

## இஸ்லாமியத் தலைவரின் 3 புதல்வர்கள் கடத்தல்!

மத்திய ஆசியக் குடியரசான தஜிகிஸ்தானின் இஸ்லாமியத் தலைவர் அமுனுல்லா நாஹ்மட்சோடாவின் புதல்வர்கள் மூவர் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் கடந்த வியாழனன்று கடத்தப்பட்டனர்.

முகமூடி அணிந்த நிலையில் சென்ற பெரும் எண்ணிக்கையான ஆயுதபாணிகள் அமுனுல்லாவின் வீட்டை உடைத்து உள் நுழைந்து புதல்வர்கள் மூவரையும் கடத்திச் சென்றனர்.

கடத்தல்காரர்களைக் கண்டு பிடிப்பதற்கான தீவிர தேடுதல்களை தனியார் படைகள் ஆரம்பித்துள்ளன.

தஜிகிஸ்தானில் முன்னர் ஐ.நா பிரதிநிதிகள் சிலர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரபல கெரில்லாத் தலைவரின் செயலாக இது இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ)

## அன்டளிப்பு

வியட்னாமுடனான நீண்டகால நட்புறவின் சின்னமாக 150 முதலைக் குட்டிகளை கியூபா வியட்னாமுக்குவழங்கியுள்ளது.

கியூபா அதிபர் பிடல் கஸ்ட்ரோ இந்த முதலைக் குட்டிகளை கடந்த புதனன்று அன்பளிப்பாக வழங்கினார்.

# இஸ்ரேல் அரசு எம்மீது போர் தொடுத்துள்ளது!

### அரபாத் குற்றச்சாட்டு!



அலெக்சான்டிரா, ஓகஸ்ட் 4

இஸ்ரேலிய அரசு பலஸ்தீன மக்கள் மீது போர் தொடுத்துள்ளது என்று பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் குற்றஞ் சாட்டியுள்ளார்.

எகிப்துக்கு விஜயம் மேற்கொண்ட அரபாத் அதிபர் ஹொஸனி முபாரக்கைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பலஸ்தீனர்கள் மீது போர் தொடுப்பதிலேயே இஸ்ரேலிய அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது: ஜெருஸலேம் நகரில் கடந்த புதனன்று நடந்த இரு குண்டுத் தாக்குதல்களை பலஸ்தீன மக்களையும், பலஸ்தீன நிர்வாகத்தையும் எதிர்ப்பதற்கு வாய்ப்பாக அது பயன்படுத்துகிறது என்று அரபாத் குற்றஞ்சாட்டினார்.

ஜெருஸலேம் நகர குண்டு வெடிப்புகளுக்கு யஸீர் அரபாத்தே பொறுப்பு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு குற்றஞ் சுமத்தியுள்ளார். (ஐ)

## கச்சதீவுக்கு உரிமை கோரி சென்னை நீதிமன்றத்தில் மனு

சென்னை, ஓக. 4

தமிழ் மாநிலத்துக்கு உட்பட்ட இந்தியாவின் ஒரு பகுதி எனக் கச்சதீவைப் பிரகடனப் படுத்துமாறு கோரி திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கே. வீரமணி சென்னை மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்திய மத்திய அமைச்சரவையின் செயலா ர், மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர், தமிழக அரசின் பிரதம செயலாளர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிபதி ஆர். ஜயசிம்ஹபாகு கடந்த புதனன்று உத்தரவிட்டார்.

ஆனால் இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கச்சதீவில் இந்திய ஆயுதப்படையினரை நிறுத்துமாறு இந்திய அரசாங்கத்தைப் பணிக்கும் இடைக்கால உத்தரவு ஒன்றை விடுக்குமாறு தமது மனுவில் வீரமணி விடுத்த கோரிக்கையை நீதிபதி நிராகரித்து விட்டார்.

இதேவேளை —

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் கச்சதீவை மீட்கத் தவறினால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கச்சதீவுக்கு "தியாகப் பயணம்" ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று இரவு இராமேஸ்வரத்தில் நடைபெற்ற 'கச்சதீவு' மீட்புரிமை மாநாட்டிலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிடர் கழகப்பொதுச் செயலாளர் கி. வீரமணி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ், பி. நெடுமாறன், ஜகவீரபாண்டியன், ஜோர்ஜ் பெர்னான்டஸ் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர். (இ-ஐ)

## உலக அரங்கில்

## வீரப்பனுக்கு மன்னிப்பு இல்லை

சென்னை, ஓக. 4

சந்தன மரக் கடத்தல் காரன் வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு அளிப்பது முடியாத காரியம் என தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

பொது மன்னிப்பு என்பது தண்டனை வழங்கப்பட்ட பின்னரே கொடுக்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர தினப் பொன் விழாவில் தமிழக முதலமைச்சரின் முன் வீரப்பன் சரணடையக் கூடிய வாய்ப்பு உருவாகுமா? என செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, அதனைத் தான் எதிர்பார்ப்பதாக கருணாநிதி தெரிவித்தார். (இ-10)

## ஹொங்கொங்கை புயல் தாக்கியது!

ஹொங்கொங்கை தாக்கிய கடும் புயல் காரணமாக ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய 'பெற்றர்' எனப் பெயரிடப்பட்ட புயலில் 30—க்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

புயலின் வேகம் குறைந்து பின்னரும் அங்கு அடை மழை தொடர்கின்றதாகவும் விமானப் போக்குவரத்தும் வீதிப் போக்குவரத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரப்பனால் எனக்கும் உயிர் ஆபத்து!

### 'நக்கீரன்' ஆசிரியர் அச்சம்

வீரப்பனால் எனது உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் எனக்குண்டு. அதனால் என்னை நானே ஒரு லட்சம் ரூபாவுக்கு காப்புறுதி செய்துள்ளேன்.

தமிழக அரசின் பிரதிநிதியாக வீரப்பனுடன் பேச்சு நடத்திவரும் 'நக்கீரன்' சஞ்சிகையின் ஆசிரியர் ராஜகோபால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று முதற்தடவை சென்று வீரப்பனைச் சந்தித்து விட்டுத்திரும்பிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

### கருத்து மோதலால் கூச்சல், குழப்பம்!

# ஜனதாதள் கட்சி மாநாட்டை விட்டு குஜ்ரால் இடையில் வெளியேறினார்!

புதுடில்லி, ஓக. 4

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணியில் இடம் பெறும் பிரதான கட்சியான ஜனதாதள் கட்சியின் இண்டு நாள் தேசிய மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ஐ. கே. குஜ்ரால் கட்சியின் நற்பண்புகளுக்கு ஏற்பட்டு வரும் களங்கம் தொடர்பாகவும், ஊழல்கள் பற்றியும் உரையாற்றிக் கொண்டிருந்த போது உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

நற்பண்புகளில் நம்பிக்கை இருந்தால் முன்னைய பீஹார் மாநில முதலமைச்சர் லாலுபிரசாத் யாதவ்வை ஆதரிக்கும் 3 அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் குரல் எழுப்பினர். இத்துடன் பீஹாரில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்ய வேண்டும் என்று கோரினர்.

ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் தற்போது சிறையில் இருக்கும் கட்சியின் முன்னாள் தலைவர் லாலுபிரசாத் யாதவ் குறித்த நிலைப்பாட்டைத் தெளிவு படுத்துமாறு அடிக்கடி உறுப்பினர்கள் குஜ்ராலிடம் கேள்வி எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து பிரதமர் குஜ்ரால் தமது உரையைப் பாதியில் முடித்துக் கொண்டு மாநாட்டில் இருந்து வெளியேறினார்.

பிரதமர் குஜ்ராலின் இந்த வெளியேற்றம் கட்சிக்குள் நிலவும் தீவிர கருத்து மோதலை அம்பலப்படுத்தியிருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஐயாத்துரை ஜனார்த்தனன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0907000199) அளவெட்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு. ஐயாத்துரை கனேஸ்வரம், அளவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [47359]

தணிகாசலம் சுதர்ஜினி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இலக்கம் 0902017643) 30-07-97 மருதனார் மடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செந்தில் கடை, தாவடிச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [47360]

### திருத்துதல்

சகலவிதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில் திருத்தித் தரப்படும், றோணியோ, ரைப்ரைற்றர் சேவிஸ் செய்து தரப்படும். (பாடசாலைகளுக்கு விஷேச கழிவுண்டு) ''காமிகேசன் வாச் வேக்ஸ்'' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [48765]

சங்கானை மீன் சந்தைக்கு அருகாமையிலுள்ள அமரர் நா. செல்லையாவின் தேவி மரம் அரிவு தொழிற்சாலையிலுள்ள, றோதை வாளும் பட்டடையும், தகரக் கொட்டகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகரீ பாலசிங்கம் (மணியம்). சங்கானை மேற்கு, மாரியவத்தை. [48633]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள் கட்டுரையை வீரகேசரியில் தொடர்ந்து எழுதும் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50. அக்கரைச் சீமையிலே நாவல் ரூபா 25. [48717]

### விண்ணப்ப முடிவு திகதி

மதுவரிப் பாதுகாவலர் பதவிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவுத் தினம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

### விற்பனைக்கு

திரு. க. ரகுராகவன் எழுதிய நிறுவன திட்டமிடல் தந்திரோபாய முகாமைத்துவத்திற்கான ஓர் அணுகுமுறை விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/1236]

அரச அதிகாரியின் எல்லாவித வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 104, கடை கோயில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.C. க்கு அண்மையில் ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு முன்பாக). [48767]

## யூனிவேர்சல்

கந்தர்மடம்.

**98 A/L PHYSICS**

★ புலங்கள் ★

திரு. ஜெயசீலன்
B. Sc (Hons)

ஆரம்பம்: 04-08-97
Mon. 7-00 A. M

**99 A/L**

பொறியியல்

ஆரம்பம்: 05-08-97
TUE. 7-00 A. M

(48769)

## ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

பொருளியல்: A/L 98, 99
'தேசிய வருமானம்'
திரு. மா. லோகசிங்கம்

பொருளியல்: A/L 98
"மாதிரி வினா விடை"
திரு. R. அன்ரனி

ஆரம்பம்: 10-08-1997

நேர சூசியை அலுவலகத்தில் பெறவும்.

- நிர்வாகி

(48747)

## கண்ணீர் அஞ்சலி

முடமாவடி ஞானவைரவர் கோயில் சனசமூக நிலையத் தலைவர் செ. சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

### இராசகுமாரி அம்மா (இராசாத்தி)

14-07-97இல் விசுவமடுவில் காலமாகியதை அறிந்து அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஞானவைரவர் சனசமூக நிலையம்

இராமலிங்கம் வீதி,
(முடமாவடி) (48779)

## 'குயின் ரவர்' புனரமைப்பு

நெடுந்தீவு, ஓகஸ்ட் 4

நெடுந்தீவு கிழக்கு தொட்டாரம் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள "குயின் ரவர்" நீண்டகாலத்தின் பின் புனரமைக்கப்பட்டுள்ளது.

## நீங்கா நினைவில் ஓராண்டு



தோற்றம்: 25 — 04 — 1955

மறைவு: 16 — 07 — 1996

திருமதி
### மீனாம்பிகை பாக்கியநாதன்

(சட்டமாணியும் சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், சத்திய ஆணையாளரும்.)

திதி: 4 - 8 - 1997

ஆண்டொன்று மறைந்தாலும் அணைந்த தீபமாய் எங்கள் உள்ளத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் எங்கள் ஆருயிர் அன்னையே! எங்களை ஆசீர்வதித்திடம்மா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 4 - 8 - 97 ஆம் திகதி ஆகிய இன்று 11. 30 மணியளவில் நடைபெறும் விசேட பூசையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
து. பாக்கியநாதன் [கணவன்],
பா. யதுகுலன் [மகன்],
பா. ஸ்ரீகுகன் [மகன்].

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. [48678]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சவரிமுத்து ஸ்ரொடிவிலன் (சூட்டி)

பூவுலகில்: 01 — 07 — 1975

விண்ணுலகில்: 04 — 08 — 1994

நீ இல்லை நிலவில்லை — உன்
நினைவின்றி எம் உயிர்இல்லை
உன் பெயர் சொல்ல பலர் உண்டு
பூமுகம் காணாமல் துடிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை தினமும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அக்கா,
அத்தான், அண்ணமார், அண்ணிமார்.

குளமங்கால்,
மல்லாகம். (48705)

## ஓராண்டு நினைவலைகள்



திருமதி
### தவநாதன் வளர்மதி

மலர்வு:- 2. 4. 1966
உதிர்வு:- 14. 8. 1996



செல்வி
### தவநாதன் தௌசன்யா

மலர்வு:- 22. 4. 1994
உதிர்வு:- 14. 8. 1996

வாடாமல் உதிர்ந்து விழுந்த எங்கள் ரோஜாப் பூக்களே!
வாழாமல் நீங்கள் சென்ற மர்மம் அறியோம்.
கார்தனில் நீங்கள் பயணம் போன போது தீச்சுவாலையாக
காலனவன் உங்களைக் கவர்ந்த நோக்கம் அறியோம்.
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் மழலை மொழிகளும், அன்பான பேச்சுக்களும்
நீங்காத நினைவலைகளாய் என்றும் எங்களில் நிலைத்திருக்கும்.
எங்கள் கண்ணீர் அலைகளை எம் செல்வங்களின்
பாதங்களில் மாலையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

நாகலிங்கம் J. P.
குடும்பத்தினர்.

ஏழாலை தெற்கு, மயிலங்காடு. (48770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவை (சிவில் / இயந்திரவியல் / மின் / கட்டட படவரைஞர்)

## வகுப்பு 11 'ஆ' பதவிக்கு ஆட்சேர்ப்பு-1997

வடக்கு-கிழக்கு மாகாண தொழில் நுட்பவியல் சேவை (சிவில் / இயந்திரவியல் / மின் / கட்டட படவரைஞர்) பதவி தரம் II 'ஆ' பிரிவுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. 1.1 இன விகிதாசாரப்படியும் பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையிலும் மேற்போந்த சேவையிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப தேர்வுகள் நடைபெறும்.

1.2 ஒரே சமமான புள்ளிகளை பெற்ற இருவரோ அல்லது அதற்கு மேற்படவோ பரீட்சார்த்திகளிருப்பின் அவர்களுள் தகுதியானவரைத் தெரிதல் பற்றிய தீர்மானம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவைப் பொறுத்த முடிவாகும்.

02. இப்பதவிக்கான சம்பளத்திட்டம்:-
ரூபா 30,060 -5x660-11x780-41,940 (27/94 பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக.)

03. ஆட்களைச் சேர்ப்பதற்கான நிபந்தனைகள்:-
வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்குள் அமைந்தனவாகும். இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதிய கொடுப்பனவுள்ளதும் விதவைகள் அனாதைகள் ஒய்வு நிதிக்கு உட்பட்டதுமாகும்.
இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் நிலைக்கு உட்பட்டதாகும். அரசாங்க / மாகாண அரசசேவையில் உள்ள ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படின் அத்தகையவர் ஒரு வருட பரீட்சார்த்த நிலைக்கு உட்படுத்தப் படுவர்.

04. தகைமைகள்:-

4.1 விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல்.

4.2 வடக்கு-கிழக்கு மாகாண அதிகார எல்லைக்குள் 22-08-1997ஆம் திகதிக்கு முன்னதாக 6 வருடங்கள் தொடர்ச்சியாக வசிப்பதுடன் தாம் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் குறைந்த பட்சம் 3 வருடங்கள் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும்.

4 3 22-08-1997 அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர அரச/மாகாண சேவையில் உள்ள அலுவலருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது.

4.4 கல்வித்தகைமைகள்:-
தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல் விவசாயம்ஆகிய விஞ்ஞான பாடங்களில் சேவைக்குப் பொருத்தமான இருபாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் க.பொ.த.(உயர்தர) சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத க.பொ.த.(சாதாரண) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மேற்கூறிய கல்வித்தகைமைகளுக்கு மேலதிகமாக பின்வருவனவற்றில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. உரிய துறையில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.
2. சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருட கால தொழில் நுட்பக் கற்கை நெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல் அல்லது தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கப்படும் பகுதி நேர கற்கை நெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு:-

1. அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்து உரிய துறையில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவர் நேரடியாக ஆட்சேர்ப்பு வகுப்பு II 'ஆ' விற்கு நியமிக்கப்படுவார்.

2. அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்து உரிய துறையில் ஒரு வருட கால முழுநேர தொழில் நுட்ப கற்கை நெறிகள் அல்லது தேசிய தொழில் நுட்ப சான்றிதழ் வழங்கப்படும். பகுதிநேர கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் பயிற்சி தரத்திற்கு நியமிக்கப்படுவதுடன் சேவைக்குரிய பாடவிடயத்துக்கு உகந்த ஒரு வருட கோட்பாடும் செய்முறையும் உள்ளடக்கிய பயிற்சிக்குட்படும் காலத்தை திறமையோடு பூர்த்தி செய்த பின்னர் ஆட்சேர்ப்பு வகுப்பு II 'ஆ' விற்கு நியமிக்கப்படுவர். பயிற்சித்தர ஆட்சேர்ப்பு வகுப்பினருக்கு வருடாந்தம் ரூபா 28,740 - 1x660- 29,400 வேதனம் உரித்தாகும்.

05. எழுத்து மூல போட்டிப்பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் குறித்த மாவட்டத்தினுள் வதியும் விண்ணப்பதாரர்களுள் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற வேண்டப்படும் தகைமையுள்ளவர்களே இப்பதவிக்கென சேர்த்துக் கொள்வதற்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர். தெரிவு செய்யப் படுவதற்கான தகைமைபெறுவதற்கு பரீட்சையில் குறித்த பாடங்கள் இரண்டில் ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளாவது பெற்றிருத்தல் வேண்டும்.
5.1 ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் பொழுது அரச பொது நிர்வாக சுற்றறிக்கை 15/90 இன் ஏற்பாடுகளுக்கமையவே செயற்படுத்தப்படும்.

06. பரீட்சைக்குரிய பாடத்திட்டம்;-
6.1 அறிவுறுத்திறனும் உளச்சார்பும்(01 மணித்தியாலம் 100 புள்ளிகள்) பரீட்சார்த்தியின் எண் திறன் சிக்கல் விடுவித்தல் தர்க்க நுட்பம் மற்றும் பொது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### வடக்கு - கிழக்கு மாகாண தொழில் நுட்பவியல் சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்/ கட்டட படவரைஞர்) தரம் 11 'ஆ' பிரிவுக்கு ஆட்களைத் தெரிவதற்கான போட்டிப் பரீட்சை – 1997

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:- (தமிழில்)
விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:- (ஆங்கிலத்தில்)
முதலெழுத்துக்களுடன் பெயர்:- (ஆங்கிலத்தில்)
தேசிய அடையாள அட்டை இல.:-

02. பரீட்சைப் பிரவேசப் பத்திரம் அனுப்ப வேண்டிய தபால் முகவரி:-
(தமிழில்):-
(ஆங்கிலத்தில்):-

03. பால்:- (ஆண் - M பெண் – F)

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:

சிங்களம் - 1 தமிழ் - 2 ஆங்கிலம் – 3

05. விண்ணப்பிக்கும் பதவி:-
வடக்கு - கிழக்கு மாகாண தொழில் நுட்ப சேவையின் தரம் II ஆ

பிரிவினது: சிவில் - 1
கட்டட படவரைஞர் - 2
பொறியியல் - 3
மின் – 4

06. இலங்கைப் பிரசையாயின் வம்சாவளியிலா பதிவினாலா.

07. இனம்: சிங்களவர் - 01 இலங்கைத்தமிழர் - 2
இந்தியத்தமிழர் - 03 முஸ்லிம் - 04
பிறர் - 05

08. பிறந்ததிகதி........... வருடம்........... மாதம்........ நாள்.
1997-08-22 அன்று வயது:-......... வருடம்........ மாதம்........ நாள்

09. I. விண்ணப்பிக்கும் மாவட்டம்:
II. நீர் வதியும் பிரதேச செயலகத்தின் பிரிவு:-
III. கிராம சேவகர் பிரிவு:-
IV. வதியும் காலம்........... தொடக்கம்........... வரைக்கும்.

10. கல்வித் தகைமைகள்:

10.1 க. பொ. த (சாதாரண)/ தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சை (பொது) (வருடமும் சுட்டிலக்கமும் தருக)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 01. | |
| 02. | | 02. | |
| 03. | | 03. | |
| 04. | | 04. | |
| 05. | | 05. | |
| 06. | | 06. | |
| 07. | | 07. | |
| 08. | | 08. | |

10.2 க. பொ. த (உயர்தர) பரீட்சை - வருடமும் சுட்டிலக்கமும்

01. 03.
02. 04.

10.2 விளம்பரத்தின் 4.4.1 அல்லது 4.4: 2.பந்திக்கமைய கொண்டுள்ள மேலதிக கல்வித்தகைமைகள்.
அதன் விவரம்
1. அத்தகைய சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் பெயர்
2. சான்றிதழ் பெற்றவருடம்
3. சான்றிதழின் இலக்கம்;

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவையும் சரியானவையும் என பிரகடனப் படுத்துகிறேன். என்னால் அளிக்கப்பட்டிருக்கும் இப்பிரகடனம் உண்மையற்றவையென நிருபிக்கப்படின் நான் நியமனம் பெற தகுதியற்றவர் என்றும் அல்லது நியமனம் பெற்றபின் அவ்வாறு நிருபிக்கப்படின் பதவியிலிருந்து நீக்கப்பட இணங்குகின்றேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன், பரீட்சைக் கட்டணமாக ................................ பிரதேச செயலாளரிடம் ரூபா 125 செலுத்தியமைக்கான .................................. திகதிய .............. இலக்கம் கொண்ட பற்றுச் சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் என உறுதியளிக்கிறேன்;

திகதி................... ...................        ..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதி செய்தல்.
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு/ திருமதி/ செல்வி............
எனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும் இவர் ..........ந் திகதி என் முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கின்றேன்.

உறுதிப்படுத்தியவர் பெயர்:
கையொப்பம்:

பதவியும் பதவி முத்திரையும்:
இச் சான்றிதழ் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரால்/ சமாதான நீதிவானால்/ சத்தியப் பிரமாண ஆணையாளரால்/ சட்டத்தரணியால் அதிகாரம் பெற்ற தரைப்படை அல்லது வான்படை அல்லது வருடாந்தச் சம்பளமாக ரூபா. 67,320/- பெறுகின்ற அரச சேவை அதிகாரியினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.
பரீட்சைக் கட்டணமாகிய ரூபா 125/- க்குரிய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டி இணைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத அமைப்பு பட்டியலில் புலிகளைச் சேர்க்க அமெ. முயற்சி

கொழும்பு ஓக 4

அமெரிக்க வெளிநாட்டுத் திணைக்களம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று அமெரிக்க செனட் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார செயற்பாடுகள் ஏற்றுமதி நிதிசம்பந்தப்பட்ட திட்டங்கள் தொடர்பான 1998 ஆம் ஆண்டு மதிப்பீட்டு சட்டம் பற்றிய செனட் விவாதத்தின்போது ஒரு திருத்தமாக இந்த யோசனை சேர்த்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற செனட் கூட்டத்தின்போது திருத்தச் சட்டங்கள் பற்றி ஆராயப்பட்ட வேளையில் செனட்டர் டொறிசெலி இந்த திருத்த யோசனையை முன்வைத்திருந்தார். செனட்டர் மக்கோனல், செனட்டர் லீகி ஆகியோர் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இதேவேளையில் செனட் வெளிவிவகார நடவடிக்கைகள் உபகுழு அதன் 98 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் தொடர்பான அறிக்கையில் இலங்கையில் பயங்கரவாத ஒழிப்புத் திட்டத்துக்கு வழங்கப்படும் ஆதரவை விஸ்தரிக்கும்படி அமெரிக்க நிர்வாகத்தை வலியுறுத்தியுள்ளது. (இ-4)

# ஆலயங்களை திருத்தாது அரசு அசமந்தப் போக்கு!

## இந்து சமயப் பேரவை கவலை

போரினால் அழிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட இந்து ஆலயங்களை அரசு உடனடியாக புனரமைக்க வேண்டும். இல்லையேல் தம்மால் இவ்வாலயங்களைப் புனரமைக்க முடியாது என்று அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைப் பகிரங்கமாகக் கோரும் தீர்மானமொன்றை இந்து சமயப் பேரவை செயற்குழு ஏகமனதாக நிறைவேற்றியுளளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற பேரவைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நீண்ட நெடுங்காலத் தொடர்புள்ள இந்துக்களும் பௌத்தர்களும் நடைபெறும் போர் காரணமாக வேறுபட்டுள்ளார்கள். இந்து ஆலயங்களைப் புனரமைப்பதில் அரசின் அசிரத்தைப் போக்கு இவ்வேறுபாட்டை மேலும் தூபமிட்டு வளர்ப்பதாகவே அமைகின்றது. இந்துக்களும், இந்து ஆலயங்களும் தாக்கப்படுவதைப் பலமுறை இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர்களுக்கு எடுத்துக் கூறி வந்துள்ளோம். பாதிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமையுங்கள் என்று அரசைப் பல முறை வற்புறுத்தியுள்ளோம். இந்த நாட்டின் தலைவர் என்ற முறையில் அழிக்கப்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயங்களையாவது ஜனாதிபதி நிதியத்திலிருந்து புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரினோம். எரிக்கப்பட்ட இந்து ஆலயத் தேர்களை மீளமைக்க உதவுமாறும் கோரினோம்.

கடிதங்களை உரிய நடவடிக்கைக்காக சமய கலாசார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டதே யொழிய எதுவித நடவடிக்கையும் இது வரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இதனால் இந்துக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட எமது ஆலயங்களை புனரமையுங்கள்; இல்லையேல் பாதிக்கப்பட்ட ஆலயங்களை எமது அரசால் புனரமைக்க முடியாது என்று பகிரங்கமாக அறிவியுங்கள் என்று கோருகின்றோம்.

மேலும், போரைச் சாட்டாக வைத்துக் கொண்டு பூட்டப்பட்டிருக்கும் கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்றவரலாற்றுப்பெருமை மிக்க இந்து வழிபாட்டுத் தலங்களைத் திறந்து விடுமாறு பலமுறை கோரியும் அவை தொடர்ந்து வழிபாட்டிற்கு விடாது பூட்டப்பட்டிருப்பது எமக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசமைப்பில் கூறப்பட்ட மதச் சுதந்திரம் இலங்கை இந்துக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்றும் இது எமது ஆத்மீக நடவடிக்கைகளைத் தடுக்கும்நீதியற்ற செயல் என்றும் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கைவங்கி 58 வருட சேவை நிறைவு விழா

இலங்கைவங்கியின் 58 வருட சேவை நிறைவு விழா யாழ். குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலும் சென்ற வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளையில் கிளை முகாமையாளர் வி. தில்லைநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. மங்களவிளக்கேற்றலுடன் ஆரம்பமான விழாவில் மங்கள விளக்கை ஆரம்ப கால வாடிக்கையாளர் கனகரட்ணம், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி கனகரட்ணம், யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே. ரி. சிவபாதம் உட்பட பல வாடிக்கையாளர்கள் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து உரைகளும் இடம்பெற்றன.

இலங்கை வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதி இரண்டாம் கிளையில் நடைபெற்ற விழாவில் இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் மற்றும் பல வாடிக்கையாளர் பங்கேற்றனர். வங்கியின் முகாமையாளர் வாடிக்கையாளர்களுக்கு வங்கியினால் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள், குடும்பத்தினர் ஆகியோருக்கான விசேட சேமிப்புத் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார். (இ-4-5-15)

## போசாக்கு கல்விக் கருத்தரங்கு; வேலணையில் நடத்த ஏற்பாடு

நெடுந்தீவு, ஓக. 4

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வளர்ந்தவருக்கான போசாக்குக் கல்வி குறித்து கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வீட்டுத் தோட்டம், போசாக்கு சத்துணவு, சனத்தொகைப் பிரச்சினையில் சிறிய குடும்பத்தின் முக்கியத்துவம், கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மாருக்கான உணவு, குழந்தைகளுக்குச் சிகிச்சையளித்தலும் பால் ஊட்டுதலும், உணவு பதனிடுதலும் சேமித்தலும், உணவு வகைகளும் போசாக்கின் முக்கியத்துவமும் போன்ற பல்வேறு தலைப்புக்களில் சம்பந்தப்பட்ட துறைசார் டாக்டர்கள், உத்தியோகத்தர்கள் விரிவுரை நிகழ்த்துவர்.

இக் கருத்தரங்கு 18 தினங்கள் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆ. தியாகராசாவும், பகுதி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ரீ. தெட்சணாமூர்த்தியும் மேற்கொண்டுள்ளனர். (ஐ-111)

## வடக்கு - கிழக்கு மாகாண தொழில்நுட்பவியல் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆட்சேர்ப்பு - 1997

### (ஐந்தாம் பக்கத் தொடர்)

(ஐந்தாம் பக்கத் தொடர்)

அறிவைப் பரிசோதித்தல்.

6.2 பொது அறிவு (01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) இவ் வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி: 01

(50 புள்ளிகள்) கற்றாடல், விஞ்ஞான முடிவுகள், அறிவியல் ஞானம் மற்றும் சர்வதேச தகவல்களை உள்ளடக்கும்.

பகுதி: 02 (சிவில்)

(50 புள்ளிகள்) இவ்வினாக்கள் பரீட்சார்த்தியின் தொழில்சார் அறிவை பரிசீலனை செய்யும் பொருட்டு கட்டட நிர்மாணமும் அவற்றின் பராமரிப்பும், தெருக்கள் நிர்மாணமும் அதன் பராமரிப்பும், நீர் விநியோகமும் வடிகால் அமைப்பும் பற்றியதாக அமையும்.

பகுதி - 02 (கட்டட படவரைஞர்)

(50 புள்ளிகள்) கட்டடக் கலைத்திறன், கட்டட நிர்மாணம், அளவுத் திட்டத்திற்கமைய வரைதல், உருவ வரைவை அறிந்து கொள்ளல், அதனை விருத்தித்தல் பற்றிய அடிப்படை ஞானம், கட்டமைப்பு, தரம், அளவிடுதல் பற்றிதாக கேத்திர வியல். இயந்திரவியல் வரைதல் பற்றிய அடிப்படை அறிவு பற்றியதானவை.

பகுதி: 02 (இயந்திரவியல்) (50 புள்ளிகள்) தொழில்நுட்ப அலுவலரொருவர் (இயந்திரவியல்) வாகனங்களையும் இயந்திர உபகரணங்களையும் பராமரிக்கும் தொழில் நுட்பச்சாலையொன்றினைப் பற்றிய செயற்பாடுகள், அதன் பராமரிப்பு நடவடிக்கை பற்றிய அறிவு வார்ப்பு வேலை, ஒட்டுவேலை பற்றிய ஆரம்ப அறிவு, இயந்திர உபகரணங்கள் பராமரிக்கும் தொழிற்சாலைகளில் பாவிக்கப்படும் ஆயுதங்களும் உபகரணங்களும் அவற்றை உபயோகிப்பது பற்றிய ஆரம்ப அறிவு, வாகனங்களில் மின் இணைப்புக்கள் பற்றிய ஆரம்ப அறிவு கொண்டிருத்தல் வேண்டும்.

பகுதி: 02 (மின்)

மின்சார பாதுகாப்பு முறைகள்; ஒற்றைப்பகுதி முப்பகுதி, நேர்மாறு மின் ஓட்டங்கள் பற்றிய ஆரம்ப அறிவு, மின்சார மானிகள் பாவிப்பது பற்றிய ஆரம்ப அறிவு மின்சார மோட்டார் ரான்ஸ்போமர், மின்சார உற்பத்தி உபகரணங்கள், வீட்டு மின் இணைப்பு பற்றிய ஆரம்ப அறிவு, மின்சார விநியோகம் பற்றிய ஆரம்ப அறிவு.

07. பரீட்சை நிலையங்கள்:-

பரீட்சை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.

08. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் மட்டும் செலுத்திய ரூபா 125/-இக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக்கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படவேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணங்கள் மீளத்திருப்பிச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண பிரதேச செயலகங்களில் கட்டப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச் சீட்டு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

09. விண்ணப்பம் அனுப்பி வைக்கும் ஒழுங்குமுறை:-

விண்ணப்பதாரர் தமது விண்ணப்பப் பத்திரத்தினை கீழ்த்தரப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய முறைப்படி பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் 'செயலாளர்', வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை

ஆணைக்குழு, இல. 35, மக்கேசர் வீதி, உவர்மலை, திருகோணமலை. என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரும் மாவட்டமும் குறிப்பிடப்படுதல் வேண்டும். (ஏற்கனவே அரச/ மாகாண சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் விண்ணப்பப் பத்திரங்களை அவரது திணைக்களத் தலைவருடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.)

கடதாசி அளவு 8''×13'' ஒரே தாளில் விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 10 வரை முன் பக்கத்திலும் இலக்கம் 11 தொடக்கம் 13 வரை மறுபக்கத்திலுமாக தயாரிக்கவும்.

10. விண்ணப்ப முடிவு திகதி:-

சகல விண்ணப்பமும் 1997-08-22 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

11. பூரணப்படுத்தப்படாததும் தாமதமாகக் கிடைத்ததும் மற்றும் அடிப்படைத் தகுதிகள் இல்லாததும் பற்றுச் சீட்டு இணைக்கப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளரால் கோரப்படும் ஆவணங்களை தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தற் பொருட்டு பரீட்சை நிலையத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். இவ் விடயம் தொடர்பான அறிவுறுத்தல் அவரால் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும். சகல பரீட்சார்த்திகளும் அவற்றுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

13. பூரணமற்றதும் தகுதியற்றதுமான விண்ணப்பங்களை நிராகரிக்கும் அதிகாரம் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

சொ. அமிர்தலிங்கம்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

1997-07-21 (சி/1253)

## புத்தூர் ச.ச. நிலையம் இயங்குகிறது

புத்தூர் கிழக்கு, மத்திய சன சமூக நிலையமும் பாலர் பாடசாலையும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

1995 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணு நடவடிக்கைகள் காரணமாக இடிந்து போன இந்த சன சமூக நிலையமும், அதனோடு இணைந்த பாலர்பாடசாலையும் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு. புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கத் தொடங்கியுள்ளன. (ஐ-15)

## நோயாளர் தங்க மண்டபம்

கொக்குவில் அரசினர் மத்திய மருந்தகத்தில் நோயாளர் தங்கும் மண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது இதற்கென நல்லூர் பிரதேச செயலரினால் இவ் வருட பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவுஸ்திரேலிய அமைச்சர்

கடந்த மாதம் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டவுனர் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துச் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணும் இலங்கை அரசின் தற்போதைய முயற்சி ஆக்கபூர்வமானதாக, சாதகமான வழியில் செல்வதாகக் கருதுகிறேன். இந்த முயற்சிக்கு அவுஸ்திரேலியா தனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும்—

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்து ஆராய்ந்து விவாதித்துக் கருத்திணக்கத்துக்கு வருவது இந்நாட்டின் அரசியல் கட்சிகளின் முழுப்பொறுப்பு மாகும்—

பொதுமக்களைக் கொன்றும் ஊனமுற்றோர் ஆக்கியும் வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்செயல்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது—

இலங்கை அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைக்கு ஊக்குவிப்பும் உற்சாகமும் அளிப்போமே அன்றி இராணுவ ரீதியாக எந்தவித உதவியையும் வழங்க மாட்டோம். அந்த விளையாட்டில் நாம் ஈடுபடமாட்டோம்.—

இந்நாட்டு இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாம் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமானால் இருதரப்புகளும் அதற்கு இணங்கி எம்மிடம் கேட்க வேண்டும். நிலைமையை நன்கு ஆராய்ந்தே, அனுசரித்தே அது சாத்தியமா என்பதனை முடிவு செய்வோம். எனினும் இருதரப்பு விருப்பமும், விண்ணப்பமும் இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை. இப்போது இவ்விவகாரம் முழுவதுமே, மிக மென்மை வாய்ந்ததாக —நொய்மை உடையதாக- உள்ளது—

அது மட்டுமன்றி, வெளியார்மத்தியஸ்தத்தினால் இவ்விவகாரத்தில் முன்னேற்றம் எதனையும் காணலாம் என்ற கருத்து இங்கு நிலவுவதாகவும் எனக்குப் புலப்படவில்லை –

அலெக்சான்டர் டவுனரின் இக் கருத்துக்களின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்ன?

இனப்பிரச்சினைக்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லைஎன்ற நிலைப்பாடே வலுவாக ஊட்டப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகளும், தமிழ் மக்களில் பெரும்பாலானோரும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் இன்றி நியாயமான, நீதியான தீர்வு ஒன்றைக் காண்பது கஷ்டம் என்று அடிக்கடி கூறி வந்தாலும் அது வெளியார் மனதில் பதியாதவாறு செய்யப்பட்டுள்ளது என்பதேயாகும்.

அரசு தரப்பும் தமிழர் தரப்பும் கூடிப் பேசித் தீர்க்கக் கூடிய கட்டத்தை இவ்விவகாரம் தாண்டிவிட்டது. ஒரு தரப்பு ஒன்றைக் கேட்க, மறு தரப்பு அதற்கு இணங்குவதற்குப் பின்னடித்து இன்னொன்றைத் தருவதாகச் சொல்லி அடம்பிடிக்க; இருதரப்புகளும் ஒன்றையொன்று சந்தேகத்துடன் பார்க்கும் நிலையில் மூன்றாவது தரப்பின் உதவியின்றி பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கப் போகின்றதோ...!

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாது

### ராஜீவ் தெரிவித்திருந்தார் என்கிறார் சிவா

கொழும்பு, ஓக. 4

வடக்கு-கிழக்கு மாகாணத்தினை இணைப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஒரு போதும் நடைபெறமாட்டாது. இதனையே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் தெரிவித்திருந்தார்:

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி பத்தாண்டுகள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' நாளேட்டிற்கு பேட்டியளித்த போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் எமது கட்சிக்குமிடையில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகத் தற்போது காணப்பட்டுள்ள இணக்கம் இலங்கை — இந்திய உடன்படிக்கையின் அடிப்படை உணர்வுக்கு எந்த வகையிலும் முரண்பட்டதல்ல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் எமக்குமிடையே காணப்பட்ட இணக்கப்பாட்டில் வடக்கு — கிழக்கு மாகாணத்தின் இணைப்பு அவசியம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு— கிழக்கு மாகாணம் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வசிப்பிடப் பகுதிகள் என அங்கீகரிக்கப்பட்டவை ஐக்கியப்பட்ட தமிழ்ப் பெரும்பான்மை மாகாணமும் புதிய முஸ்லிம் பெரும்பான்மை அலகும் என்ற இரட்டைத் திட்டங்களுக்கு கூட்டணியும் முஸ்லிம் காங்கிரஸும் இணங்கியுள்ளன.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போது முஸ்லிம் மக்களிடம் இந்த விடயம் பற்றி கலந்துரையாடப்படவில்லை. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பின்னர் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தான் முஸ்லிம்கள் பங்கு பற்றினர்: எனினும், வடக்கு—கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக முஸ்லிம்கள் அவநம்பிக்கையுணர்வையே கொண்டிருந்தனர்; தென்கிழக்கு சபை வடக்கு – கிழக்கு சபை என்பவற்றை எடுத்துக் கொண்டால், தமிழ்ப் பெரும்பான்மைப் பகுதிகள் ஒரே அலகாகவே இருக்கும். இந்த யோசனைகள் அரசமைப்பு ரீதியான பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டிருக்கும். இதுவே வடக்கு — கிழக்குப் பகுதியில் தமிழ் – முஸ்லிம் மக்களின் நட்புறவைப் பேணுவதற்கு ஒரேயொரு வழி.

ஐக்கிய இலங்கைக்குள் இன மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நியாயபூர்வமான- ஆரம்ப அம்சமாக- இலங்கை- இந்திய ஒப்பந்தம் அமைந்தது.

தமிழர்களுக்கு அர்த்தபுஷ்டியான அதிகாரப் பரவலாக்கல் வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதே இந்த உடன்படிக்கையால் கிடைத்தபலன் எனலாம் — என்றார்.

(ஐ-5)

# உலகில் சிறந்த கெரில்லாக்களுடன் இலங்கை போரில் ஈடுபட்டுள்ளது

### இந்திய தளபதி கல்கத் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 4

''உலகிலேயே தலைசிறந்த நன்கு பயிற்சி பெற்ற, இலட்சியத்துக்காக தம்மை அர்ப்பணித்த ஒரு கெரில்லா அமைப்புடன் இலங்கை இராணுவம் சண்டையில் ஈடுபட்டுள்ளது.''

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வு காணமுடியாது. ஆயுதங்களால் ஈழத்தை அடைய முடியாது. ஆயுதசக்தியால் எந்தத்தீர்வையும் தமிழ் மக்கள் மீது அரசு திணிக்கவும் முடியாது.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உரிமைகளை வழங்கக் கூடிய தீர்வை நடுநிலை நின்று காண வேண்டும் —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

# பழமரச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விவரப் பட்டியல்

### திருமலைக்கு அனுப்பப்பட்டது

திருநெல்வேலி, ஒக. 4

யாழ். மாவட்டத்தில் பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மானிய உதவியை பெறத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதியைப் பெறும் பொருட்டு அப்பட்டியல் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் த.சிவலோகநாதன் இப்பெயர்ப் பட்டியலை சிபார்சு செய்து அண்மையில் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் வாழை, தேசிக்காய் போன்ற பழ உற்பத்தியை மேற்கொள்வதற்கு மானிய உதவி வழங்குவதற்காக வடக்கு-கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் ஓர் இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஜ-135)

# கலைஞர்களைக் கௌரவிக்க இந்து சமயப் பேரவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 4

சமூக, சமய, கலை, கலாசார விழுமியங்கள் அழிக்கப்படாது பாதுகாப்பதில் தியாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றும் துறைசார் அறிஞர்களையும், கலைஞர்களையும் பாராட்டிக் கௌரவித்து விருது வழங்க யாழ். இந்து சமயப்பேரவை தீர்மானித்துள்ளது.

அண்மையில் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

சமயப்பணி, சமூகப்பணி, இசை (நாதஸ்வரம், தவில்) பண்ணிசை, சிற்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த கலைஞர்களையும், அறிஞர்களையும் இந்து சமயப் பேரவையின் ஆண்டு நிறைவு விழாவில் பாராட்டி விருது வழங்குவது என்று அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நாளை

**ஆடி 20**

செவ்வாய்க்கிழமை

திதி: துதிகை மாலை 5.47 வரை.

நட்சத்திரம்: மகம் மாலை 6.30 வரை;

கரிநாள்

சுபநேரம்: 10.34-12.04

ராகுகாலம்: 3.04 4-.34

## தொண்டாவுடன் பீரிஸ் பேச்சு

கொழும்பு, ஓக. 4

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் மலையகத்துக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்து அமைச்சர் தொண்டமானுடன் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பேச்சு நடத்தியுள்ளார்.

(இ-3-150)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக 4

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**இன்று**

★ 4.30 மணி:- பற்றீஷியன் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக நீல அணி.

★ 5.30 மணி:- பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் அணி.

**நாளை**

★ 4.30 மணி:- யாழ்: சுயாதீன அணி எதிர் ஜொலிஸ்ரார்ஸ் அணி.

★ 5.30 மணி:- உதயன் அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணி. (உ)

### அதிகாரப் பரவலாக்கல் யோசனை

# மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக. 4

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல்யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை தேசிய கூட்டு ஆணைக்குழு எடுக்க விருக்கிறது.

சிங்களமக்களின் நலன்கள் குறித்து விசாரணை செய்து வரும் சிங்கள ஆணைக்குழுவை நியமித்துள்ள தேசிய கூட்டுஆணைக்குழு விரைவில் குருநாகலில் கூடவிருக்கிறது.

அக்கூட்டத்திலேயேஇந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

முன்னாள் நீதியரசரும், ஆணைக்குழுவின் தலைவருமான ராஜா வனசுந்தர தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயசூரிய கலந்து உரையாற்ற விருக்கிறார்.

அதேநேரம் - தற்சமயம் விசாரணை மேற்கொண்டு வரும் சிங்கள ஆணைக்குழு முன்பாக முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமட், சிங்கள கல்விமான்களான பற்றிக் அமரசிங்க, டாக்டர் குணதாஸ அமரசேகர ஆகியோர் சாட்சியமளிக்கவிருக்கின்றனர் (இ-3-150)

## 2 பொலீஸார் காயம்!

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் களுவாஞ்சிக்குடியில் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு விடுதலைப் புலிகள் கிரனேட் ஒன்றை வீசினர்.

இதில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட 2 பொலீஸார் காயமடைந்தனர்.

அதேநேரம் — வெளிகந்த பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு பொலீஸார் விடுமுறையில் இருந்து வீடு திரும்பும் போது நேற்று முன்தினம் பிற்பகல் குண்டு வெடிப்பில் இறந்தார்.

விடுதலைப் புலிகளின் குண்டுக்கு இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதும், இவரது மரண விசாரணையில் இவர் தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வடக்குக்கான உயர் நிலை மாநாடு

வடக்குக்கான கப்பல் சேவை குறித்து உயர் நிலை மாநாடு இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கடற்படை, இராணுவ தளபதிகளும், வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரிகளும் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

வடக்குக்கான பயணிகள் கப்பல் சேவையை மீளஆரம்பிப்பது தொடர்பான முக்கிய முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3-150)

## 69 கிலோ அபின் மீட்பு

நீர்கொழும்பு, ஒக. 4

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதைவஸ்து தொடர்பான வழக்கின் போது சான்றுப் பொருளாக அங்கு ஒப்படைக்கப்பட்ட 14 லட்சம் ரூபா பெறுமதியான 69 கிலோ அபினை ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கும்படி நீர்கொழும்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து வள்ளத்தில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட இந்த அபினை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியிருந்தனர்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில் இடம்பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்)
களில் பெரும் உயிரிழப்புக்களை ஏற்படுத்திய மோதலாக கடந்த வெள்ளியன்று ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் கருதப்படுகிறது.

இந்த மோதலில் களப்பலியான 126 பேரில் 88 பேரின் விவரங்களை புலிகள் நேற்று வெளியிட்டனர்.

களப்பலியானவர்களில் பிரபல பாடகர் சிட்டுவும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் படையினரிடமிருந்து பெரும் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

படையினர் தரப்பில் 69 பேர் இறந்ததாக அரசு அறிவித்துள்ள போதிலும் சுயாதீன செய்தி நிறுவனங்கள் இதனைவிட இழப்பு அதிகம் என்று தெரிவித்தன.

அரசின் அறிவிப்பின் படி பொலீஸ் தரப்பில் 36 பேரும்—

கடற்படைத் தரப்பில் 13 பேரும்—

இராணுவ தரப்பில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

183 படையினர் காயமடைந்துள்ளனர்.

ஆனால் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மட்டும் 164 படையினர் சிகிச்சை பெறுவதாக பி.பி.சி. நேற்று இரவு தெரிவித்தது.

இவர்களில் சிலர் கடும் காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21-164)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்,

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L
பிரிவு 4
**DAY CLASS** 9-00 மணி
பிரிவு 2
**EVENING CLASS** 3-00 மணி

ஆண்டு 6,7,8,9,10 புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன
ஆரம்பம்: 06-08-97 (1 மணி)

(48764)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா மகேஸ்வரன்

(ஒய்வுபெற்ற கிராமசபை உத்தியோகத்தர்)

மூளாய்வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் 02-08-97இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், தனஞ்ஜெயன், தனேசனின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (மலேசியா), பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்), தர்மலிங்கம் (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), பத்மநாதன் (லங்கா சீமெந்து லிமிட்டட்), காலஞ்சென்ற ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோதார், கோகிலாம்பாள், வசந்தாதேவி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்), பாலசுப்பிரமணியம் (மின் இணைப்பாளர்), பாலதுரை (சவூதி அரேபியா), பாலஈஸ்வரன் (பிரான்ஸ்), பாலராமன் (லண்டன்) பாலகுமார் (லண்டன்), தங்கேஸ்வரி, யோகேஸ்வரி, தர்மேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அண்ணாமலைநாதன், செல்வராஜா, சத்தியலிங்கம் (லண்டன்), உமா, பிரகேஸ்வரி, ஜெந்திரராணி, கலைவாணி, செல்வராணி கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03-08-97 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ம. தனேசன் (மகன்)

பிரதான வீதி,
வட்டு - தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

(48780)

## காசிப்பிள்ளை சின்னம்மா

இணுவில் மேற்கு பொன்னப்பா பதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை சின்னம்மா 3-8-97 இல் காலமானார்.

அன்னார் சரவணமுத்து சின்னத்தங்கத்தின் அன்பு மகளும், காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவனேசன் (கனடா), வரதராசா (வர்த்தகர்), சுசிலாதேவி, காந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அனுலா (கனடா), சிவலிங்கம் (ஆசிரியர், இரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், சுப்பிரமணியம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராசேந்திரம் (உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), மகேஸ்வரி, ஈஸ்வரியம்மா, முத்துலிங்கம், செல்வராசா, காலஞ்சென்ற ஐஸ்வரியம்மா, தளையசிங்கம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜன், ஜம்பதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-8-97 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. காசிப்பிள்ளை
(கணவர்)

(48781)

# யாழ்ப்பாணம் வராதது குறித்து அமெரிக்கத் தூதுவர் கவலை

கொழும்பு, ஓக. 4

''இலங்கையில் 1960 ஆம் ஆண்டு கனிஷ்ட அதிகாரியாக இருந்த சமயம் யாழ்ப்பாணம் போய்வந்தேன். ஆனால் பின்னர் இலங்கைத் தூதராக வந்தபின் யாழ்ப்பாணம் போகமுடியவில்லை''

இப்படி இலங்கைக்கான அமெரிக்க தூதர் பீற்றர் பேர்லின் கவலை வெளியிட்டார்.

ஐ. நா. சபையில் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியின் உதவியாளராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் இவருக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் விருந்துபசாரம் அளித்தார்.

இந்த விருந்தில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா, திறைசேரிச் செயலாளர் கிங்ஸ்லி பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

''அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் சமாதானத்தைக் கொண்டுவரும்'' என்றும் அங்கு உரையாற்றுகையில் பீற்றர் பேர்லின் மேலும் தெரிவித்தார். (இ-3-150)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)
உறுதி நடவடிக்கையின் முதல் கட்டம் பூர்த்தியடையும்; அதன்பின்னர் 2 அல்லது 3 மாதங்களில் 2 ஆம் கட்டம் ஆரம்பமாகும்.

பிரசாரம் எதுவும் இல்லாமல் நெடுங்கேணிப் படைப் பிரிவினர் புளியங்குளத்துக்கு இரண்டரை கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியுள்ளனர்.

புளியங்குளத்தில் இரு படையணிகளும் இணைந்தால் 24 கிலோமீற்றர் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துவிடும். கிளிநொச்சியைக் கைப்பற்ற 48 கிலோ மீற்றர் செல்ல வேண்டும்.

இந்த இணைப்பைத் தொடர்ந்து ஓமந்தை, புளியங்குளம், நெடுங்கேணி, வெலி ஓயா, கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களை இணைத்து பாதுகாப்பு வேலி அமைக்கப்படும். அதற்கு 2 அல்லது 3 மாதங்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முல்லைத்தீவு தெற்குடனான நிலரீதியான தொடர்பு புலிகளுக்கு துண்டாடப்பட்டு விடும்.

தற்போதைய நிலைப்பாட்டை நோக்கும்போது அடுத்த வருடமும் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை தொடரும்—

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## பிரபாவைப்...

(முதலாம் பக்கத் தொடர்)
நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நடக்கும் யுத்தத்தில் எப்படி வெல்வது? என்று பெனாஸிரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

''விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் பிடித்தால் தான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும். இதற்குத் தொலைபேசிகளை ஒற்றுக்கேட்க வேண்டும். பாகிஸ்தானில் இருந்த தீவிரவாத அமைப்புக்களின் தலைவர்களைப் பிடிக்க இந்த வகையான நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றி பெற்றேன்'' என்றார் பெனாஸிர்.

''இந்த யுக்தி இங்கு சரிவராது. நகரத்தில் இருந்தால் இது சரிவரும். விடுதலைப் புலிகள் காடுகளில் இருக்கிறார்களே'' என்றார் நீலன் திருச்செல்வம்.

''காடுகளை வெட்டி அழிக்க வேண்டியதுதானே. புலிகள் வெளியில் வருவார்கள்'' என்று கூறினார் பெனாஸிர்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் பொதி எப்படியிருக்கிறது என்று பெனாஸிர் கேட்டார்.

அரசின் பொதி நிறைவேறுவது ஐ. தே. க. வின் கையில் தான் இருக்கிறது என்று பதில் கூறப்பட்டது.

''அமுல் செய்ய முடியாத பொதியால் என்ன பிரயோசனம்'' என்று கேட்டார் ரணில் விக்கிரமசிங்க. (இ-3.150)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)
களும் - திருகோணமலைக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தனர்.

அதேநேரம் - ''குட்வில் கைட்'' கப்பல் திருத்த வேலைகளைப் பார்வையிட பொறியியலாளர் குழுவொன்று நாளை திருகோணமலைவர விருக்கின்றது. (இ-3-150)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கம் தொடர்)
ளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு அவரிடம் கோரினார்.

இருவார கால விஜயத்தை மேற்கொண்டு சென்றுள்ள அவர் முக்கிய ராஜதந்திரிகளுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. அதிகாரியுடனான சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமானால் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் அரசு பேசவேண்டும். புலிகளை விட்டு வேறு எவருடனும் பேசிப் பயன் இல்லை. இதுவே இன்றைய வடக்கு - கிழக்கு நிலைமை.

காலத்துக்குக் காலம் இலங்கையில் மனித உரிமை பேணப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டாலும், படையினர் அப்பணிப்புரைகளை முறையாகக் கடைப்பிடிப்பதில்லை. அதை உதாசீனம் செய்கிறார்கள்.

மனித உரிமை மீறல்கள் அதிகமாக இடம்பெற வழி வகுக்கும் பயங்கரவாத, அவசரகாலச் சட்டங்கள் முற்றாக அகற்றப்பட வேண்டும். அச்சட்டங்களில் உள்ள பாரதூரமான சரத்துக்கள் அகற்றப்படவில்லை.

மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த அமெரிக்காவும், சர்வதேச நாடுகளும் முன்வர வேண்டும் என்றார்.

## திருத்த வேலை

ஊர்காவற்றுறை துறைமுகப்பாலம் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எக்ஸ். ஜே செல்வநாயகம் தெரிவித்தார். (இ-111)

## வவுனியாவுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்)
பாதுகாப்பு வலயங்கள் பலப்படுத்தப்பட்டு விட்டன.

4 ஆம் பாதுகாப்பு வலயம் இன்னமும் பலப்படுத்தப்படவில்லை.

வேலைசெய்ய மறுத்த 350 பொலீஸாரும் வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது ஆயுதங்களை வவுனியாவில் உள்ள பொலீஸ் தலைமையகத்தில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

ஊரெழு ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய
மஹோற்சவத்தை முன்னிட்டு
சைவாலய முன்னேற்றக் கழகத்தினால்
நடத்தப்பட்ட
சமய பொது அறிவுப் போட்டிக்கான

# பரிசளிப்பு விழா

இடம்:- **ஆலய மண்டபம்.**
நாள்:- **செவ்வாய்க்கிழமை (5-8-97)**
நேரம்:- **முற்பகல் 10 மணி** [பழைய நேரப்படி]
பிரதமவிருந்தினர்:- பேராசிரியர், கலாநிதி
**ப. கோபாலகிருஸ்ண ஐயர்**
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பரிசு பெறுபவர் விவரம்:-

தங்கப்பதக்கம் பெறுபவர்:- செல்வி ரேணுகா இராசையா
உரும்பிராய் இந்துக் கல்லூரி.

ஆறுதல் பரிசு பெறுவோர்:-

★ ச. சுகந்தினி — யா/வயாவிளான் ம. ம. வி.
★ சி. கஜந்தினி — யா/யூனியன் கல்லூரி.
★ இ. பிரமிளா — யா/வயாவிளான் ம. ம. வி.
★ மு. ராஜேஸ்கண்ணா — யா/மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.
★ சி. அனுசியா — [படிவ இலக்கம் 599]
★ த. கீர்த்திகா — யா/உடுவில் மகளிர் கல்லூரி.
★ சு. தவமதி — யா/யூனியன் கல்லூரி.
★ [படிவ இலக்கம் 182]

ஊக்குவிப்புப் பரிசு பெறுவோர்:-

★ சு. சிவவதனி — யா/மகாஜனாக் கல்லூரி.
★ ப. கௌதமி — யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
★ ஆ. பிரதாபன் — யா/யாழ். இந்துக் கல்லூரி.
★ ச. பானுமீரா — யா/இராமநாதன் கல்லூரி.
★ R. ஜீவகாந்தன் — யா/மல்லாகம் ம. வி.
★ சி. ஞானகன் — யா/உரும்பராய் சைவத்தமிழ் வி.
★ க. வினேஸ் — யா/பொஸ்கோ வித்தியாலயம்.
★ K. அனித்தா — யா/மகாஜனாக் கல்லூரி.
★ கி. ஞானப்பிரியா — யா/வயாவிளான் ம. ம. வி.
★ தி. சபேசன் — யா/வயாவிளான் ம. ம. வி.
★ சி. கலீபன் — யா/வயாவிளான் ம. ம. வி.
★ பு. தயாளினி — யா/வயாவிளான் ம. ம. வி.

விளம்பர அன்பளிப்பு:-
**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

[48789]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org